43

# றமலான் நோன்பு.

43
2.57.

by

S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் (பாக்கவி)

அவர்கள்

★

பிரசுரிப்பவர்கள்:-

உத்தம நூலகம்

முஹம்மதிய நடுத்தெரு.

உத்தமபாளையம்—மதுரை ஜில்லா

1957.

QT:4
L.N57
113794

முதற் பதிப்பு: 1948
இரண்டாம் பதிப்பு: 1957

43794

சகல உரிமைகளும் ஆசிரியருக்கே

Q7:4
N57

★

விலை ரூ. 0—8—0

தபால் செலவு தனி. வியாபாரிகளுக்கு தக்கக் கழிவு உண்டு

கிடைக்குமிடம்:- உத்தம நூலகம்,
முஹம்மதிய நடுத்தெரு,
உத்தமபாளையம் P. O. (S. INDIA.)

# பொருளடக்கம்.


| பொருள் | பக்கம் |
|---|---|
| முகவுரை ... ... ... | 1 |
| றமலான் நோன்பு ... ... ... | ,, |
| பிடிகை ... ... | 3 |
| றமலான் மாத நோன்பு பற்றி திருகுர்ஆன் ... | 4 |
| நோன்பின் தத்துவம் ... ... | 5 |
| நோன்பு நோற்கும் முறை ... ... | 12 |
| நோன்பின் வகைகள் ... ... ... | ,, |
| நோயாளி, பிரயாணி ... ... | 13 |
| ஷர்த்துகள் ... ... ... ... | 15 |
| நோன்பின் ருக்னுகள் ... ... ... | 16 |
| பிறை பார்த்தல் ... ... ... | .. |
| நோன்பை முறித்தலும். கப்பாரா கொடுத்தலும் ... | 17 |
| நோன்பை முறிப்பவைகள் ... ... | 18 |
| நோன்பை முறிக்காத காரியங்கள் ... ... | 19 |
| நோன்பின் மக்றூஹுகள் ... ... ... | 20 |
| நோன்பின் ஸுன்னத்துகள் ... ... | 21 |
| நோன்பின் முஸ்தஹப்புகள் ... ... | ,, |
| நோன்பை வீணாக்குபவைகள் ... ... | ,, |
| தராவீஹ் தொழுகை ... ... ... | 22 |
| வித்றுத் தொழுகை ... ... | 26 |
| இஃதிகாப் ... ... ... | 27 |
| லைலத்துல் கத்ர் ... ... ... | 29 |
| பித்று ஸதக்கா ... ... ... | 35 |
| பெருநாள் தொழுகை | 38 |
| நிய்யத்து ... ... | 40 |

# முகவுரை

சோதரீர்!

ரமலான் நோன்பு என்ற இச் சிறுநூல், சென்ற 1948 வருடம் முதன் முதலாக அச்சிடப் பெற்று, இனாமாக வினியோகம் செய்யப் பட்டது. அக்காலத்தில் இருந்த மதுரை ஜில்லா ஜமிஅத்துல் உலமாயே இஸ்லாம் என்ற சபையின் முயற்சியால் திண்டுக்கல்லில் ஸ்தாபிக்கப்பட்ட யூனிட்டி பிரிண்டிங் அண்டு பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட் பிரஸ்ஸிலிருந்து மத ஊழியம் நடைபெற வேண்டும் என்ற நன்னோக்கத்தில் திண்டுக்கல் சந்திரவிலாசம் புகையிலை கம்பெனியின் உரிமையாளர்கள் இப்பிரசுரத்திற்கு. வேண்டிய காகிதங்களை இனாமாக வாங்கிக் கொடுத்தார்கள். மதுரை மௌலானா மௌலவி **M. O.** முஹம்மதுகனி ஆலிம் சாகிப் பாக்கவி அவர்கள் அச்சுக்கூலிக்கு சில மதாபிமானிகளிடம் சந்தா வசூல் செய்து கொடுத்தார்கள். இவர்களின் உதவியின் பேரில் அச்சிடப் பட்டதால் இனாமாகவே வினியோகம் செய்யப்பட்டது.

இந்நூல். பார்வைக்கு மிகச்சிறிதாக இருந்தாலும், நோன்பு நோற்கும் முஸ்லிம் பொதுமக்களுக்கு மிகப் பிரயோஜனமாக இருந்ததால், அதனை மீண்டும் அச்சிட்டுப் பிரசுரம் செய்ய வேண்டும் என்று பல அன்பர்கள் எம்மை கேட்டுக் கொண்டிருந்ததை உத்தேசித்து இரண்டாம் முறையாக இப்பொழுது வெளியிடுகிறோம். அத்துடன் ஹனபி மதுஹபினருக்கு

மட்டுமில்லாமல் ஷாபிஈ மதுஹபினருக்கும் பிரயோஜனமாக இருக்கும்பொருட்டு தராவிஹ் தொழுகைபெருநாள்தொழுகை நோன்பு முதலியவைகளில் இரண்டு மதுஹபுகளுக்கும் இடையிலுள்ள சொற்ப வித்தியாசங்களையும் இவ்விரண்டாம் பதிப்பில் கூடுதலாகச் சேர்த்துப் பிரசுரித்துள்ளோம். இன்ஷா அல்லாஹ் நோன்பு பற்றிய ஹனபி, ஷாபிஈ மதுஹபுகளுக்கு இடையிலுள்ள வித்தியாசப்பட்ட எல்லா மஸ்அலாக்களையும் விளக்கி விரிவான தனிநூல் ஒன்று எழுதி வெளியிட வேண்டுமென்ற நாட்டம் உண்டு. அதனை உடனே இயற்றுவதற்கான சந்தர்ப்பம் தற்போது இல்லாததால், இந்த அளவில் இதனை வெளியிடுகிறோம். இதனையும் இனமாகவே வினியோகம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் எமக்குண்டு. என்றாலும், அதற்குத்தகுந்த பொருளாதார வசதி குறைவாக இருப்பதால், இதற்குச் சொற்ப கிரையத்தை ஏற்படுத்தியுள்ளோம். இந்நூல் யாவரிடமும் பரவி நன்மையை நல்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக!

இங்ஙனம்

உத்தமபாளையம்
10—3—57.

S. S. முஹம்மது அப்துல் காதிர்
சன்மார்க்க ஊழியன்

# ரமலான் நோன்பு.

## பீடிகை.

முஸ்லிம் உலகில் ரமலான் மாதத்துக்கு தனிப்பெரும் விசேஷம் அளிக்கப்படுகிறது. இம்மாதம் வருவதற்கு முன்னதாகவே முஸ்லிம்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள முனைகின்றனர். இம்மாதம் வந்துவிட்டால் இது முடிவடையும் வரை முஸ்லிம்களது வீடுகள், தெருக்கள், கிராமங்கள், பட்டணங்கள், நகரங்கள் யாவும் சோபிக்கின்றன. ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி எல்லா முஸ்லிம்களும் தங்கள் தொழில் முறைகளில் அதிகமாக ஈடுபடாமல் இறைவனை வணங்குதல், திருகுர்ஆனை ஓதுதல், தான தர்மங்களைச் செய்தல் போன்ற காரியங்களில் இரவிலும் பகலிலும் ஈடுபடுகின்றனர். தங்கள் ஆடவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுப்பதில் ஸ்திரீகள் மற்றெல்லா மாதங்களைக் காட்டிலும் அதிக சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர். அத்துடன் தெய்வ வணக்கம், திருகுர்ஆன் ஓதல்

முதலிய காரியங்களில் ஆண்களைவிட ஒருபடி அதிகமாகவே அவர்கள் முன் செல்கின்றனர். அந்த மாதம் முழுவதிலும் அவர்களுக்கு இரவிலும், பகலிலும் சலியா உழைப்பு என்று கூறுவது மிகையாகாது. இதற்கெல்லாம் காரண மென்ன வெனில், இம்மாதத்தைக் கொண்டாடுமாறு இறைவன் கட்டளையிட்டது ஒன்று தான். இக் கட்டளை முஸ்லிம்களால் முடிந்த வரையில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

## றமலான் மாத நோன்பு பற்றி திருகுர்-ஆன்

''விசுவாசங் கொண்டவர்களே! நீங்கள் (துற்கிரித்தியங்களைத்) தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு எண்ணப்பட்ட சில நாட்களுக்கு, உங்களுக்கு முன்னரிருந்தவர்கள் பால் விதிக்கப்பட்டது போல உங்கள் பால் நோன்பு விதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலின், உங்களில் எவர் (இந் நாட்களில்) நோயாளியாகவோ, அல்லது பிரயாணத்திலோ (இருந்து நோன்பு நோற்க இயலாமல்) இருந்தால், வேறு நாட்களில் (தவறிபபோன நோன்புகளை) கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். இன்னும் அதற்கு அசக்தர்களாக இருப்பவர் மீது ஒரு ஏழையின் உணவு, பரிகாரமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

றமலான் மாதம், ஜனங்களுக்கு நேர்வழி காட்டியாகவும், நேர்வழியின் அத்தாட்சிகளாகவும், (நன்மை தீமைகளைப்) பிரித்தறிவிப்பதாகவுமுள்ள திரு குர்ஆன் அதில் அருளப்பட்டது. ஆகவே உங்களில் எவர் அந்த மாதத்தைக்

காண்கின்ருரோ அதில் அவர் நோன்பு நோற்க வேண்டும். ஆனல், நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ இருப்பவர் வேறு நாட்களில் (இதனை) கணித்துக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு அல்லாஹ் சுலபத்தை நாடுகிருன். இன்னும் உங்களுக்குக் கஷ்டத்தை அவன் நாடுகிருனில்லை. இன்னும் எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தியாக்குவதற்காகவும், உங்களை அவன் நேர்வழியிற் சேர்த்ததன்படிக்கு அல்லாஹ்வை நீங்கள் பெருமைப் படுத்துவதற்காகவும், இன்னும் நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டும் (இதனை விதியாக்கினன்)''

என்று இறைவன் திருகுர்ஆனில் கூறியதற்கேற்ப நாம் திருகுர்ஆன் அருளப்பட்டதை நினைவு கூர்ந்து அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு இம்மாதத்தை நாம் கொண்டாடு கிறேம். இது திருகுர்ஆனின் பாலும், அதனை அருளிய இறைவன் பாலும், நமக்கு அதனை உபதேசித்த திரு நபி (ஸல்) அவர்கள் பாலும் நாம் கொண்டுள்ள விசுவாசத்துக்கு அறிகுறி யாகும்.

## நோன்பின் தத்துவம்

ஒரு இஞ்ஜினீயர் தன்னல் உற்பத்தி செய்யப்பட்ட மெஷினை எப்படி உபயோகிக்க வேண்டும், பழுதடையாமல் எப்படி அதனைப் பாதுகாக்க வேண்டும். பழுதடைந்து விட்டால் அதனை எப்படி மராமத்துச் செய்ய வேண்டும் என்பன போன்ற விபரங்களைப் புத்தகமாக எழுதி அச்சிட்டு, அம் மெஷினை வாங்குவோருக்கு சப்ளை செய்வது போலவும்,

அம்மெஷினை உபயோகிக்க நேர்முகமாக பயிற்சி அளிக்கத் தக்க திறமையாளரை நியமித்துக் கற்றுக் கொடுப்பது போலவும் நம்மையும் இவ்வுலகையும் படைத்து ரக்ஷித்து காப்பவனுகிய அல்லாஹுதஆலா நாம் எவ்வாறு உலகில் வாழ வேண்டும்? நமது பிறவியின் லக்ஷ்யமென்ன? நமக்கும் தனக்கும் இடையிலுள்ள பந்தமென்ன? அதனை எப்படி நிறைவேற்ற வேண்டும்? நமக்கும் பிறருக்குமிடையிலுள்ள சம்பந்த மென்ன? அதனை எப்படி நிறைவேற்ற வேண்டும்? என்பன போன்ற விதிகளை நமது அறிவுக்கு எளிதில் படக் கூடியவாறு விதி விலக்குகள், உவமான உவமேயங்கள், முற்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள், முன்னோர்கள் நடந்த முறைகள், அவைகளால் அவர்களடைந்த நன்மை தீமைகள் முதலிய சகல விபரங்களையும் திருகுர்ஆனில் விபரித்து, அவ் விதிகளை கிரியாம்சையில் செய்து காண்பித்து பயிற்சியளிக்கும் ஆசிரியராக நபிகள் பெருமானர் (ஸல்) அவர்களை இவ்வுலகுக்கு அனுப்பி வைத்தான். பிரபஞ்சம் என்ற மெஷினை உற்பத்தி செய்த சிற்பியாக இறைவனும், அதனை உபயோகிக்கும் முறைகளடங்கிய விபர புத்தகமாக திருகுர் ஆனும், அவைகளைக் கற்றுக்கொடுக்கும் பேராசிரியராக நபிகள் பெருமானர் (ஸல்) அவர்களும் இருந்து வருகிறார்கள். இதனை மதபாஷையில் வேறு பெயர்களால் நாம் கூறுகிறோம்.

இறைவன் நம்மைப் படைத்து போஷித்துக் காத்து, நமக்குத் தேவையான யாவையும் அந்தந்தக் காலத்தில் குறைவில்லாமல் கொடுத்து வருவதற்கு நாம் நன்றி செலுத்த வேண்டும் என்பது நம்மவருக்குத் தெரிந்த விஷயமே.

இந்த நன்றியை நாம் செலுத்துகையில் அதிலிருந்து பிரயோசனமடைபவர் எவர்? நாமா? அல்லாஹுதஆலாவா? என்ற விபரம் மேலே எழுதப்பட்டுள்ள திருவசனங்களை ஊன்றி கவனிப்போருக்கு விளங்காமற்போகாது.

நோன்பு நோற்றல் என்பது ஒரு தொழில். மற்றைய தொழில்களை பிறர் பார்க்க முடிவதுபோல இத்தொழிலை பார்க்க முடியாது. ஒருவர் நோன்பு நோற்பதாக வெளிக்கு காட்டிக் கொண்டு மறைவில் நன்கு உண்ணலாம் பருகலாம். அப்புறம் எதையும் அருந்தாததுபோல மற்றவர்களிடமும் காட்டிக் கொள்ளலாம். ஆகவே, நோன்பு நோற்பதாக ஒருவர் கூறினுல் அவர் சொல்லை நம்புவதைத் தவிர வேறு வழி இல்லை. நீர் நோன்பு நோற்க வில்லை என்று மறுத்துக் கூற மற்றவரால் முடியாது. மெய்யாகவே நோன்பு நோற்பதையும் வெளிக்கு நோன்பாளிபோல் நடிப்பதையும் உள்ளாலுள்ளபடி அறியும் ஆற்றல் அல்லாஹு தஆலாவுக்குத் தானிருக்கிறது. இதனைத்தான் இறைவன் 'நோன்பு எனக்காகவுள்ளது. அதற்கு நானே கூலிகொடுப்பேன்' என்று கூறியுள்ளதாக ஹதீது ஷரீபில் கூறப்பட் டிருக்கிறது. ஆகவே, ஒருவர் மெய்யாகவே நோன்பு நோற்பாராயின் அவர் இறைவனது கட்டளைக்கு மெய்யாகவே பணிந்து, அவன் தனக்கு செய்துள்ள பேருபகாரத்துக்கு மெய்யாகவே நன்றி செலுத்துபவராகிறுர். இத்தகையோருக்கு ஆத்ம சக்தியும் மன வலிமையும் இதனுல் வளருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

பகற் பொழுதில் உணவருந்திக் கொண்டும், பானங்களை பருகிக் கொண்டும், இதர தின்பண்டங்களைத் தின்று

கொண்டு மிருந்தவர்கள் மெய்யாகவே அவைகளை அருந் தாமல் தவிர்த்துக் கொள்வதும், பசி தாகத்தைப் பொருத்துக் கொள்வதும் பெரும் சிரமம். அத்துடன் மற்றவர்கள் அவை களைச் செய்யும்போது, அவர்களைப் பார்த்துக் கொண்டே சும்மா இருப்ப தென்பது இன்னும் அதிகச் சிரமம். இத் தகைய சிரமத்தை ஒரு மாதகாலம்வரை ஒருவர் மனப்பூர்வ மாக ஏற்றுக்கொண்டு பூர்த்தியாக நிறைவேற்றுவ தென்றல் அவரது உறுதி தளராமலும், பக்தி குன்றாமலும் இருந்தால் தான் இயலும். இவ்விதமாக ஒருவருக்கு ஆத்ம சக்தி வளரு கிற இதே சந்தர்ப்பத்தில், உண்டியையும் பானத்தையும் குறைப்பதால் தேக சோர்வும், பலக்குறைவு மேற்படுகின்றன. இம்மூன்று காரியங்களும் ஒன்று சேருகையில் அவன் தீய தான, பாபமான காரியங்களைச் செய்யாமல் தவிர்த்துக் கொள் ளும் திறன் பெற்றவனுகிறன். இதனைத் தானிறைவன் மேற் கூறப்பட்ட வசனத்தில் 'நீங்கள் தவிர்த்துகொள்ளும் பொருட்டு'' என்பதாகக் கூறியுள்ளான்.

ஆத்மார்த்த முன்னேற்றத்தை விரும்பும் ஞானிகள் பசித் திரு, விழித் திரு, தனித்திரு'' என்ற கொள்கையைக் கடைப் பிடித்து ஒழுகுவது உலகறிந்த விஷயம். நமலான் மாதத்தில் இம் மூன்று அம்சங்களும் முஸ்லிம்களால் அனுசரிக்கப் படுகின்றன. முதலாவதாக பகற் காலத்தில் எதையும் அருந் தாமல் பட்டினி இருக்கின்றனர். இராக்காலங்களில் வழக்க மாக அவர்கள் தூங்கும் நேரத்துககு அதிகமாகவே விழித் திருக்கின்றனர்.

தராவீஹ் தொழுகையை நிறைவேற்றுவதற்காக மஸ்ஜி தில் ஒன்று கூடி இரவு சுமார் 11-மணி வரை வணக்கத்தில்

ஈடுபடுகின்றனர் அப்புறம் சிலர் தனித்திருந்து வணங்குகின்றனர். மற்றவர்கள் நித்திரைக்குச் செல்கின்றனர். என்றாலும், ஸஹர் என்னும் விடியற்கால உணவை அருந்துவதற்காக காலை 3-மணிக்கெல்லாம் துயிலெழுகின்றனர். உணவருந்திய பிறகு காலை பஜ்று தொழுகையை நிறை வேற்றுவதற்காக தனித்த முறையில் திருகுர்ஆன் ஓதல், தொழல் போன்ற காரியங்களில் ஈடுபடுகின்றனர். இவ்வண்ணம் இரவில் பெரும் பகுதி இறை வணக்கத்திலேயே கழிகிறது. எனவே, ஞானிகள் ஆத்மார்த்த முன்னேற்றத்துக்காக அனுசரிக்கிற முத்தொழில்களும் முஸ்லிம்களால் வருடத்துக்கொருமுறை ஒருமாதகாலம் வரை அனுசரிக்கப்படுவதுடன் நேரம் முழுவதையும் இறைவணக்கத்திலும் பக்தியிலுமே கழிக்கின்றனர். ஞானிகள் அனுசரிக்கும் இம் முத்தொழில்கள் அவர்களாகஏற்படுத்திக்கொண்ட முறைகளே யாகும். அதற்கு மறு உலகில் புண்ணியம் இருக்கிறதா என்பது சிந்திக்கத்தக்க விஷயம். ஆனால், முஸ்லிம்கள் அனுசரிக்கிற இம் முத்தொழில்கள் இறைவன் கட்டளையையும் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களது வழி முறையையும் பின் பற்றியனவாக இருப்பதால் இவைகளுக்கு மறு உலகிலும் நன்மைப் பயன்கள் கிடைக்கின்றன. இதற்காகத்தான் நோன்பு நோற்போர் இறைவனது கட்டளைக்குப் பணிந்து நோன்பு நோற்பதாக நிர்ணயம் (நிச்சயித்து) செய்ய வேண்டும் என்று சட்டமியற்றப்பட்டிருக்கிறது. ஒரு முஸ்லிம் இந்த நிர்ணயமில்லாமல் வெறுமனே உண்ணாமலும் பருகாமலும் இருந்தால், அது நோன்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தவிர, இவ்வாறான நிர்ணயத்துடன் நோன்பு நோற்கும் முஸ்லிம் தனது நிர்ணயத்திற்குப் பங்கம் வராமல் அதனைப்

பரிபூரணமாக நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தால் பிறரை தூஷித்தல், புறங் கூறல் போன்ற காரியங்களையோ, சண்டை சச்சரவு செய்தல் போன்ற காரியங்களையோ புரிய முன்வருவதில்லை. அக்கிரமங்கள் புரிவதையே நித்திய தொழிலாகக் கொண்டவருங் கூட நோன்பு நோற்பாராயின் அவைகளை முடிந்த மட்டில் குறைத்துக் கொள்கிறார். ஆகவே, மற்றைய காலங்களில் முஸ்லிம்களால் நிகழ்த்தப் படும் பாவவினைகள் ரமலான் மாதத்தில் பெருத்த அளவிற்கு நிறுத்தப்படுகின்றன. இதனைக் குறித்துத்தான் ரமலான் மாதத்தில் ஷைத்தான் விலங்கிடப்படுகிறான் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

மேலும், வருஷத்தில் பதினோரு மாதங்களும் தொழா மலும் இறைவணக்கம் செய்யாமலும் இருப்பவர்களும் கூட ரமலான் மாதத்தில் நோன்பு நோற்று, தொழுகைக்கு தவறா மல் வருவார்களாயின், முன்னர் தங்களால் நிகழ்ந்த பாவ வினைகளை நினைத்து மனம் உருகிக் கண்ணீர் வடிப்பதையும் இறைவனிடம் மன்னிப்புத் தேடுவதையும் காணலாம்.

ஒருவர் படுபாவியாக இருந்தபோதிலும் தன் குற்றத்தை மெய்யாகவே உணர்ந்து இறைவனிடம் மன்னிப்புக் கேட்பாராயின் அவர் நிச்சயமாக மன்னிக்கப்பட்டு பரிசுத்த ராக மாறிவிடுவார் என்பதில் சந்தேகமில்லை. இதனைக்குறித்து "எவர் ரமலான் மாதத்தில் விசுவாசத்துடனும் பக்தியுடனும் நோன்பு நோற்கிறாரோ அவர் முன் செய்த பாவங்கள் அவ ருக்கு மன்னிக்கப்படுகின்றன" என்று ஹதீது ஷரீபில் சொல்லப்பட்டிருக்கிறது.

நிற்க, நாம் மேலே கூறியவை மத சம்பந்தப்பட்டவை. இது சம்பந்தமான இதர விபரங்களையும் குறிப்பிடுவதாயின் இச்சிறு பிரசுரம் விரிவடையுமாதலின் இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம். நோயாளிகளை பட்டினியாக இருக்கச் செய்தால் அவர்கள் எவ்வளவு துரிதமாக சுவாத்தியமடைகின்றனர் என்பதை வைத்திய உலகம் நன்கறிந்திருக்கிறது. ஜுரத்துக்கு பட்டினி சுன்னங்கம் என்று பொது ஜனங்கள் சாதாரணமாகச் சொல்லிக் கொள்வர். ஆகவே, நோன்பு நோற்பதால் ஆத்மார்த்த முன்னேற்ற மேற்படுவது மட்டு மில்லாமல், தங்கள் தேகத்திலுள்ள அநேக நோய்களிலிருந்தும் அவர்கள் விடுதலை யடைகிறார்கள் என்பதை நாம் சொல்லிக்காட்ட வேண்டியதில்லை. தவிர, மற்றவர்கள் பட்டினி இருப்பதற்கும் நோன்புக்கும் அனுஷ்டான முறையில் மிகவும் வித்தியாசமிருக்கிறது. பழரசம், உப்புக் கலந்த ஜலம், காப்பி, தேனீர் போன்ற திரவபதார்த்தங்களை நிறுத்திக் கொள்ளாமல் மற்றைய உணவுகளைத்தான் மற்றவர் நிறுத்துகின்றனர். இது பூரணமான பட்டினிஹிடமில்லை அப்படி இருந்தும் இதனால் பல வித வியாதிகள் நீங்குவதாக வயித்திய உலகமும், ஆத்மார்த்த முன்னேற்ற மேற்படுவதாக முஸ்லிமல்லாத ஞான உலகமும் கூறுகிறதென்றால், பரிபூரணமான பட்டினிஹடமான நோன்பினால் எத்தனை விதமான நோய்கள் நீங்குமென்பதையும் ஆத்மார்த்த முன்னேற்றங்கள் ஏற்படுமென்பதையும் வாசகர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அளவற்ற மன வலிமையும் ஆத்மார்த்த முன்னேற்றமும் ஏற்படுவதனால்தான் முற்காலத்து ஸஹாபிகள் றமலான் மாதத்திலேயே வெற்றிகளத்தனையையுங் கண்டனர். இஸ்லாமிய சரித்திரத்தைப் படித்தவருக்கு இவ்வுண்மை விளங்கும்.

இனி, நோன்பில் உண்ணுமலும் பருகாமலும் இருப்பதை மட்டிலும் ஏற்படுத்தாமல் காம நுகர்ச்சியும் தடுக்கப்பட்டிருக்கிறது. நோன்பாளி பகற்காலத்தில் காம நுகர்ச்சி கொள்ளலாகாது. அவ்வாறு செய்தால் நோன்பு முறிந்து விடும். ஆகவே, நோன்பாளி காம நுகர்ச்சிக்குத் தூண்டப் பட்டாலும் நோன்பு என்ற ஒரு உணர்ச்சியால் அதனை அவர் அடக்கிக்கொள்கிருர். இதன் மூலம் அவர் தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் பழக்கத்தையும் பெற்றுக்கொள்கிருர். ஆகவே, நோன்பு நோற்கும் ஒரு தொழிலால், தேக சுகம், ஆத்மார்த்த முன்னேற்றம், மனவலிமை, உணர்ச்சியை அடக்கும் திறன், ஒழுக்க விழுப்பம் முதலிய அநேக நன்மைகள் ஏற்படுகின்றன. விரிவான கிரந்தங்களில் இதன் நன்மைகளைப் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ளலாம். இனி நோன்பு நோற்க வேண்டிய முறை, அதன் விதி விலக்குகளைக் குறித்து சிறிது ஆராய்வோம்.

# நோன்பு நோற்கும் முறை

நோன்பு நோற்பதாக நிர்ணயஞ் செய்து கொண்டு பூப் பிளந்ததிலிருந்து சூரியாஸ்தமனம் வரையில் உண்ணுமலும், பருகாமலும், காம நுகர்ச்சி கொள்ளாமலும் இருக்க வேண்டும்.

# நோன்பின் வகைகள்

நோன்புகள் பர்லு, வாஜிபு, சுன்னத்து, மன்தூபு, நபில், மக்றூஹு ஆக ஆறு வகைப்படும். இவைகளில் பர்லான நோன்புகள் என்பது ரமலான் மாதத்தின் நோன்புகளாகும்.

முஸ்லிமாக இருந்தால், பயித்தியம் போன்றவைகளில் லாமல் சித்த சுவாதீன முள்ளவராக இருத்தல், பாலிகாக அதாவது யுக்தவயதை அடைத்திருத்தல், இஸ்லாமிய நாட்டில் இருத்தல் ஆகிய நான்கு காரியங்கள் எவரிடத்தில் ஒருங்கே அமைத்திருக்கின்றனவோ அவருக்கு நோன்பு பர்லாகிவிடும். இஸ்லாமிய ஷரீ அத்தின்படி நிகழுகிற அரசாங்கங்கள் இவ்வுலகில் மிகவும் சுருக்கமாயினும், முஸ்லிம்கள் தங்கள் ஆசாரப்படி நடப்பதற்கு தடைசெய்யாத நாடுகள் அநேக மிருக்கின்றன. ஆதலால், தாருல் இஸ்லாமில் குடியிருக்காமல் வேறு நாட்டில் குடியிருப்பவர் 'ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பது பர்லு' என்பதைத் தெரிந்திருப்பதுமட்டும் போதுமானது. இதனை உணர்ந்தவர் நோன்பு நோற்கக் கடமைப் பட்டவராகிறார்.

ஒருவரிடம் மேற்கண்ட நான்கு அம்சங்களும் பொருந்தி இருந்தாலும் நோயாளியாகவோ, முஸாபிராகவோ (பிரயாணியாகவோ) இருந்தால் நோன்பு நோற்பது கடமையல்ல. ஆனால், நோன்பு நோற்றால் அந்த நோன்பு அவருக்கு நிறைவேறிவிடும். இதனையல்லாமல் ஸ்திரீகளுக்கு மாதாந்த ருது, பிரசவருது ஆகியவைகள் இல்லாதிருக்க வேண்டும். இவைகளுள்ள ஸ்திரீகள் நோன்பு நோற்கக்கூடாது.

## நோயாளி, பிரயாணி

நோயாளியும் பிரயாணியும் நோன்பு நோற்காமலிருந்து ள அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் நோன்பு நோற்கக் கூடாது என்றில்லை. அவர்கள் நோன்பு நோற்றால் அது நிறைவேறிவிடும். "பிரயாணத்தில் நோன்பு

நோற்ருல் அது நிறைவேருது. ஆதலால் பிரயாணிகள் நோன்பு நோற்கக் கூடாது'' என்று அஹ்லுல்லாஹிர் என்ற வர்க்கத்தார் கூறியுள்ளார்கள். இவர்கள் ஹனபீ, மாலிக்கி, ஷாபிஈ, ஹன்பலி மத்ஹபுகளைச் சேர்ந்தவர்களல்லராதலால், இவர்கள் கூற்றை . சுன்னத்து வல்ஜமா அத்தார் மதிக்க வேண்டியதில்லை.

பிரயாணி நோன்பு நோற்காதிருப்பது அப்ஜல் என்பதாக இமாம் அவ்ஜாயீ (றஹ்) கூறியுள்ளார். நோன்பாளியாக இருக்கிற ஒருவர் பிரயாணம் செய்தால் அவர் நோன்பை விட்டு விடலாகாது என்று ஹனபீ, மாலிக்கி, ஷாபிஈ மதுஹபுகளில் கூறப்பட்டிருக்கிறது. ஒருவர்பிரயாணத்திலிருந்து ஒரு தன் சுய ஊருக்குத் திரும்பி வந்தால், அவர் நோன்பு நோற்காமலிருப்பின், உள்ளூருக்கு வந்த பின்னர் எதையும் உண்ணுமலும் பருகாமலும் நோன்பாளியைப் போல இருந்து விடவேண்டும்.

நோயிலிருந்து சுவாத்தியம் ஏற்படும் என்ற நம்பிக்கை இழக்கப்பட்ட நோயாளியும், தள்ளாத வயதை யடைந்தவரும் நோன்பு நோற்க வேண்டியதில்லை. அதற்கு பதிலாக அவர்கள் பித்யா கொடுக்க வேண்டும் (வாஜிபு) என்று இமாம் அபூஹனீபா (ற ஹ்) கூறியுள்ளார். ஷாபிஈ மதுஹபிலும் இது மிகவும் சரியான சொல் என்று ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனல், பித்யா என்பது எவ்வளவு என்பதை நிர்ணயிக்கும் விஷயத்தில் ஹனபீ ஷாபிஈ மதுஹபுகளுக்கிடையில் அபிப்பிராய பேதமிருந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் அரை மரக்கால் மணிக் கோதுமை அல்லது ஒரு மரக்கால் தொலிக் கோதுமை கொடுக்க வேண்டும்.

என ஹனபி மதுஹபு கூறுகிறது. ஒவ்வொரு நாளும் ஒரு முத்து கொடுக்க வேண்டும் என்று ஷாபிஈமதுஹபு கூறுகிறது மேற்கண்டவர்கள் நோன்பு நோற்கவும் தேவை இல்லை. பித்யாகொடுக்கவும் தேவை இல்லை என்று மாலிக்கி மதுஹபு கூறுகிறது.

## ஷர்த்துகள்.

நோன்பு நோற்பதாக காலாகாலத்தில் நிய்யத்துச் செய்ய வேண்டும். நிய்யத்தில்லாமல் நோன்பு நிறைவேறாது. ஆனால், அது றமலான் நோன்பா? வேறு நோன்பா? என்பதைக்குறிப்பிடவேண்டும்என்று மாலிக்,(றஹ்)ஷாபிஈ,(றஹ்) ஆகியவர்கள் கூறியுள்ளார்கள். நோன்பு என்று பொதுப்பட நிய்யத்துச் செய்தாலும் போதுமானது என்று இமாம் அபூஹனீபா (றஹ்) கூறியுள்ளார். எப்பொழுது நிய்யத்துச் செய்யவேண்டும் என்பதில் இமாம்களுக்கிடையில் அபிப்பிராய பேதமிருந்து வருகிறது. றமலான் மாத நோன்பாக இருந்தால் சூரியாஸ்தமனத்திலிருந்து ஸுப்ஹு ஸாதிக் அதாவது கிழக்கே மெய் வெள்ளை கீறுவதற்குள்ளாக நிய்யத்துச் செய்ய வேண்டும் என்று இமாம் மாலிக் (றஹ்), இமாம் ஷாபிஈ (றஹ்) கூறியுள்ளார்கள். இரவிலேயே நிய்யத்துச் செய்ய வேண்டும். இரவில் நிய்யத்துச் செய்யவில்லையாயின் ஜவால் அதாவது அடித்திரும்புவதற்குள்ளாக நிய்யத்துச் செய்து கொள்ளலாம் என்று இமாம் அபூஹனீபா (றஹ்) கூறியுள்ளார்.

நோன்புக்கு மாறானவைகளான மாதாந்தருது, பிரசவருது போன்றவைகள் இல்லாதிருத்தல், நோன்பை

முறித்து விடக்கூடியவைகள் நிகழாதிருத்தல் ஆகிய இம் மூன்றும் நோன்பு நிறைவேறுவதற்கான ஷர்த்துகள். ஆகவே, ஒருவர் நிய்யத்துச் செய்யாமல் நோன்பிருந்தால், அது நோன்பாக இறைவனு லங்கீகரிக்கப்பட மாட்டாது. நிய்யத்துச் செய்து நோன்பிருக்கும்போது மாதாந்த ருதுவோ பிரசவ ருதுவோ அல்லது நோன்பை முறித்துவிடக்கூடிய இதர காரியங்களில் ஏதேனுமோ நிகழ்ந்து விட்டால் நோன்பு நிறைவேறாது.

## நோன்பின் ருக்னுகள்.

வயிறு, வெட்கஸ்தலம் இவைகளுக்குச் சம்பந்தப் பட்டவைகளின் இச்சைகளை நிறைவேற்றாமல் தடுத்துக் கொள்ளல்.

## பிறை பார்த்தல்

றமலான் மாதப்பிறை பிறந்நாலும் அல்லது ஷஅபான் மாதத்தில் முப்பது நாள் கழிந்தாலும் றமலான் நோன்பை நோற்க வேண்டும். சந்திர மாதங்கள் சிற்சில சமயங்களில் 29-உயில் முடிவடைந்து விடுவது வழக்க மாதலால், ஷஅபான் மாதத்தில் 29-உக்குப் பின்னர் வருகிற நாள் அந்த மாதத்தின் 30-வது நாளா? அல்லது றமலான் மாதத்தின் முதல் நாளா? என்ற சந்தேகத்துக்கு இடமேற்படுவதால் அதற்கு சந்தேக தின மென்று பெயர்.

ஷஅபான் மாதக்கடைசியில் ஏற்படுகிற இச் சந்தேக தினத்தில் பிறை பார்க்கப்படும் நேரத்தில் படுவானில் மேகம் அல்லது தூசு புகை போன்றவைகள் தோன்றி மறைத்துக்

கொண்டால் (இந்தத் பிறையைப் பார்த்ததாக) ஒருவர் சாக்ஷி யங் கூறுவது போதுமானது. ஒரு சாக்ஷியின் ஆதாரத்தை வைத்துக் கொண்டு நோன்பு நோற்க வேண்டும். ஆனல், றமலான் மாதத்தின் கடைசியில் 30-வது நாளில் பெரு நாளைக் குறித்த சந்தேக நாள் உண்டாகிறது. இந்த நாளில் மேகம் தூசு போன்றவைகள் படுவானை மறைத்துக் கொண் டால், அப்பொழுது பெருநாள் பிறையைப் பார்த்ததாக குறைந்த பக்ஷம் இரு ஆடவர்கள் அல்லது ஒரு ஆடவரும் இரண்டு ஸ்திரீகளும் சாக்ஷியம் பகர வேண்டும். வானில்மேகம் தூசு, புழுதி, புகை போன்றவைகள் மறைக் காமல் விண் தெளிவாக இருந்தால் பிறை பார்த்ததாக ஒரு பெருங் கூட்டம் சாக்ஷி கூற வேண்டும்.

# நோன்பை முறித்தலும், கப்பாரா கொடுத்தலும்

ஸம்ஸர்க்கம் செய்தல், உண்ணல், பருகல் ஆகியவை களில் எதையேனும் வேண்டுமென்றே செய்தால் நோன்பு முறிந்து விடுவதுடன் கப்பாரா என்னும் பரிகாரமும் செய்ய வேண்டும்.

ஒரு அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அதற்கு இடமேற்படாவிடில் தொடர்ச்சியாக 2 மாதங்கள் நோன்பு நோற்க வேண்டும். இதற்கியலாவிடில் 60 ஏழைகளுக்கு காலை மாலை இருவேளை முழுச் சாப்பாடு கொடுக்க வேண்டும். இதற்குத்தான் பரிகாரம் என்று பெயர். இந்நாட்டில் அடிமை கள்இல்லாததால் அடிமையை விடுதலை செய்ய வேண்டும்

என்ற பிரச்சினையே இல்லை. ஆதலால், 2 மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும். துல்ஹஜ்ஜு மாதத்தின் பெருநாளிலும், அதற்குப் பின்னுள்ள மூன்று நாட்களிலும், றமலான் மாதப் பெருநாளிலும் நோன்பு நோற்கலாகாததால், இந்த நாட்கள் இடையில் வராதபடி பார்த்து 2 மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும். இதில் கொஞ்சம் தவறினாலும் மறுபடியும் 2 மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும். இதற்கு இயலாதவர்கள் 60 ஏழைகளுக்கு இரண்டு வேளைகள் முழுச் சாப்பாடு கொடுக்க வேண்டும். ஆனால் ஒரே ஆளுக்கு 60 நாட்களுக்கு இரு வேளைச் சாப்பாடு போடலாம் அல்லது 60 ஆட்களுக்கு இரண்டுநாள் தினசரி ஒருவேளை சாப்பாடு போடலாம். எவ்வாறாயினும் 60 நபர்கள் இரண்டு வேளை சாப்பிட வேண்டும். சாப்பாடு தயார் செய்தும் அளிக்கலாம், அல்லது உணவுப் பொருள்களையும் அளிக்கலாம். ஆனால், இவ்வுணவுப் பொருள்களது அளவை முதலியவைகளை உலமாக்களிடம் கேட்டுத் தெரிந்து அதன்படி செய்ய வேண்டும்.

## நோன்பை முறிப்பவைகள்.

வாய் கொப்பளிக்கும்போது தண்ணீர் உள்ளே இறங்கிவிடல். நித்திரையிலிருந்து கொண்டே ஜலமருந்தல். கிழக்கு வெளுக்கவில்லை என்று நினைத்து காம இச்சையை நிறை வேற்றிக்கொள்ளல், பிறருடைய நிர்ப்பந்தத்திற்காக நோன்பை முறித்தல், நோன்பை வைத்திருக்கிற ஞாபகமில்லாமல் சாப்பிடுதல், ஞாபகமில்லாமல் காமஇச்சையை நிறைவேற்றிக் கொள்ளல், சொர்ப்பன ஸ்கலிதமானவரும், காம

இச்சையுடன் பார்த்ததால் இந்திரிய ஸ்கலிதமானவரும், அதிகமாக வாந்தி செய்தவரும் நோன்பு முறிந்துவிட்டதாக நினைத்துக்கொண்டு ஞாபகத்துடன் உணவருந்தல், அல்லது காம இச்சையை நிறைவேற்றல். செவிக்குள் எண்ணெய் வார்த்துக் கொள்ளல். மனைவியை முத்தமிட்டதால் அல்லது தீண்டியதினுல் இந்திரிய ஸ்கலிதமாதல். மலஜலம் கழித்து துப்புரவு செய்யும்போது முன் துவாரம் பின்துவாரம் இவைகளில் ஜலம் சென்று விடல், வாய் நிறம்ப வாந்தியெடுத்து அதனை விழுங்கி விடல், பற்களுக்கிடையில் கடலை அளவுள்ள வஸ்துக்களிலிருந்து அவைகளைத் தின்று விடல் சூரியாஸ்தமன மடைவதற்குள் நோன்பு திறந்து விடல் ஆகியவைகள் நோன்பை முறித்து விடும்.

## நோன்பை முறிக்காத காரியங்கள்.

தான் 'நோன்பாளி என்பதை மறந்து விட்டுச் சாப்பிட்டாலும், பானம் அருந்திலும், ஸம்ஸர்க்கம் செய்தாலும் நோன்பு முறியாது. (இவைகளைச் செய்து கொண்டிருக்கும் பொழுது, வேறு ஒருவர் பார்த்து, "நீர் நோன்பாளியாயிற்றே?" என்று ஞாபகப் படுத்திய பின்னரும் மேற்கண்ட காரியங்களைச் செய்தால் நோன்பு முறிந்து விடும்.)

காம உணர்சியுடன் பார்ப்பதாலும், அல்லது சிரிப்பதாலும் ஸ்கலிதமாகி விடுமாயின் நோன்பு முறியாது. கண்களில் சுருமா இடல், ரத்தம் குத்தி வாங்கல், புறம் பேசல் ஆகியவைகளால் நோன்பு முறியாது.

புகை, தூசுபோன்றவை வாயினுள் நுழைந்து விட்டால் நோன்பு முறியாது. ஆனல், (வேண்டு மென்றே நுழையும்படி செய்தால் நோன்பு முறிந்து விடும்)

ஜுனுபாளியாக (குளிக்கக் கடமைப் பட்டவராக) ஒருவர் எழுந்து குளிக்காமலேயே அந்த நாள் முழுவதுமிருந்து விட்டாலும் நோன்பு முறியாது. ஆனல், ஜுனுபாளியாக இருப்பவர் குளிக்காமலிருந்த குற்றத்திற்கு ஆளாவார். காது குடைவதால் நோன்பு முறியாது.

பற்களுக்கிடையிலுள்ள வஸ்து கடலைப் பிரமாணத்திற்குக் குறைவாக இருந்து அதை விழுங்கிவிட்டால் நோன்பு முறியாது.

சொற்பன ஸ்கலிதமாதல். காதினுள் ஜலம் சென்று விடல், பற்களுக்கிடையில் இரத்தம் வெளியாகி தொண்டையினுள் சென்று விடல், சாப்பாடு குழம்பு முதலியவைகளை நாவில் வைத்து உப்புப் பார்த்துத் துப்பி விடல் ஆகியவைகளால் நோன்பு முறியாது.

# நோன்பின் மக்ரூஹுகள்

அவசியமின்றி வஸ்துக்களைமெல்லல், ருசி பார்த்தல், ஜலஉபாதைக்கிருந்து விட்டு ஜலத்தால் துப்புறவு செய்வதிலும், ஒலுச் செய்யும்போது நாசிக்கு நீர் செலுத்துகையிலும் அளவுக்கதிகமாகச் செய்தல், வாயில் ஜலத்தை வைத்துக்கொண்டிருத்தல், உமிழ்நீரை ஒன்று சேர்த்துக் கூட்டி விழுங்கல், குளிக்கும்போது ஜலத்தினுள்ளிருந்து காற்றை விடல், ஆசையை அடக்க முடியாதென்ற பயமுள்ளவர் தமது மனைவியை முத்தமிடல் முதலியவைகளை நோன்பாளிகள் செய்வது மக்ரூஹுகாகும்.

தவிர, மென்று கொடுப்பதற்குத் தக்க ஆளில்லாத குழந்தைகளுக்குப் பண்டங்களை மென்று கொடுத்தல், கோபக்

காரர்களான தங்கள் ஆடவர்களுக்குப் பயந்து சப்பாட்டை ருசி பார்த்துத் துப்பிவிடல், தாடி மீசைகளுக்கு எண்ணெய் பூசிக் கொள்ளல், பற்குச்சியால் பல்லைத் துலக்குதல் ஆகியவை மக்ரூஹு அல்ல.

## நோன்பின் ஸுன்னத்துகள்

நோன்பு நோற்பதற்காக ஸஹர் செய்தல் அதாவது விடியற்காலவேளையில் சாப்பிடுதல். நோன்புதிறப்பதற்கு ஏற்பட்ட சரியான நேரத்தில் தாமதமில்லாமல் நோன்பு திறத்தல். பேரித்தம்பழம் போன்ற கனிவர்க்கங்களால் அல்லது ஜலத்தால் நோன்பு திறத்தல் நோன்பு திறப்பதற்கு நிய்யத்துச் சொல்லல், குளிக்கக் கடமைப்பட்டவர்கள், கிழக்கு வெளுப்பதற்குமுன் குளித்தல் வாசனையை முகருதல், ஹலாலான பொருளைக் கொண்டுநோன்பு திறத்தல், திருகுர்ஆன் ஓதுதல் முதலியவை நோன்பின் சுன்னத்துகள்.

## நோன்பின் முஸ்தஹப்புகள்.

தன்குடும்பத்தாருக்குத் தாராளமாகச் செலவு செய்தல். தான தர்மங்களைச் செய்தல், மதசம்பந்தமான கிரந்தங்களை ஆராய்தல் முதலியன.

## நோன்பை வீணாக்குபவைகள்

பொய் சொல்லல், புறங் கூறல், தூஷணை செய்தல், அவதூறு செய்தல் முதலியவை நோன்பை முறிக்காத காரியங்களாயினும், இவைகள் நோன்பின் பயனை இல்லா தொழித்து விடுகின்றன. ஆகவே, நோன்பாளிகள் இவைகளைப்பற்றி

மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தவிர, நோன்பு நோற்பவர்களில் சிலர் பகற் காலங்களில் வாய்ச் சண்டை பிடிப்பதில் முனைந்து விடுவது சகஜமாக இருந்து வருகிறது. முக்கியமாக தாம்பூலமருந்துகிறவர்கள், பொடிப் போடுகிறவர் கள், புகையிலை உபயோகிப்பவர்கள் இதில் சிக்கிக்கொள் கின்றனர். இவை நோன்பின் பயனை வீணாக்கி விடு கின்றன என்பதை அவர்கள் உணர்வார்களாக. இது சம் பந்தமான இதர விபரங்களை விரிவான கிரந்தங்களில் காண்க.

# தராவீஹ் தொழுகை

றமலான்மாதத்தில் இஷாவுடையபர்லுத் தொழுகைக்குப் பின்னர் இரண்டிரண்டு ரக்கஅத்துகளாக இருபது ரக்கஅத்து கள் தொழுவது ஸுன்னத்து முஅக்கதா. இதனை இமாம்ஜமாஅத்தாகத் தொழுவது ஸுன்னத்து கிபாயா. ஒரு ஊரில் சிலர் ஒன்றுகூடி இமாம்ஜமாஅத்தாக தராவீஹ் தொழு கையை நிறைவேற்றி விட்டால் போதுமானது. ஆனால், இமாம் ஜமாஅத்தாகத் தொழாமல் அவ்வூர் வாசிகள்யாவரும் தனித்தனியே தராவீஹ் தொழுகையை நிறைவேற்றினல், இமாம் ஜமாஅத்தாகத் தொழாதிருந்த குற்றத்துக்கு அவ்வூர் வாசிகள் யாவரும் ஆளாவார்கள். சிலர் ஒன்று கூடி இமாம் ஜமாஅத்தாகத் தொழா விட்டால், இமாம் ஜமாஅத்தை விட்ட குற்றத்திலிருந்து யாவரும் விடுபடுவர்.

இரண்டிரண்டு ரக்கஅத்துகளாக பத்து ஸலாம்களில் இருபது ரக்கஅத்துத் தொழுவது ஸுன்னத்து என்று ஹனபீ, ஸாபிஈ, ஹன்பலீ மதுஹபுகள் கூறுகின்றன. முப்பத்து ஆறு ரக்கஅத்துகள் தொழவேண்டும் என்பதாக மாலிக்கி மதுஹபில்

சொல்லப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. நாற்பது ரக்கஅத்துகள் என்றும் ஒரு ரிவாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. வஹ்ஹாபிகள், அஹ்லஹதீதுகள் எனப்படுவார்கள் எட்டு ரக்கஅத்துகள் என்றுங் கூடக்கூறி அதன்படியே தொழுதும் வருகின்றனர்.

தராவீஹ் தொழுகையை இமாம் ஜமா அத்தாகத் தொழுவது வாஜிபு கிபாயா என்றும் கூட இமாம் தஹாவி (றஹ்) கூறியுள்ளார். இது மிகக், கடப்பான சொல். நபி (ஸல்) அவர்கள் காலத்தில் வித்றுத் தொழுகை நீங்கலாக இருபது ரக்கஅத்துகள் தொழுததாக இப்னு அப்பாஸ் (றலி) கூறி இருக்கிறார்கள். இந்த ஹதீதை இமாம் இப்னு அபீஷைபா (றஹ்) இமாம் தப்ரானி (றஹ்) இமாம் பைஹக்கி (றஹ்) ஆகியவர்கள் எடுத்தெழுதி இருக்கிறார்கள். ஹஜ்றத் உமர் (றலி) அவர்கள் கலீபாவாக இருந்த காலத்தில் இருபது ரக்கஅத்துகள் தராவீஹ் தொழுததாக "மூஅக்த்தா" என்ற ஸஹீஹான ஹதீது கிரந்தத்தில் இமாம் மாலிக் (றஹ்) அவர்கள் எழுதியுள்ளார்கள். பதினொரு ரக்கஅத்துகள் தொழுததாகவும் அதே கிரந்தத்தில் மற்றொரு ஹதீது எழுதப்பட்டிருக்கிறது அதாவது ஹஜ்றத் உமர் பாறூக் (றலி) அவர்கள் கலீபாவாக இருந்த ஆரம்பக் காலத்தில் வித்றுத் தொழுகை உள்பட பதினொரு ரக்க அத்துகள் என்றும் அவர்களுடைய பிற்காலத்தில் வித்றுத் தொழுகையை அல்லாமல் தராவீஹ் மட்டும் இருபது ரக்க அத்துகள் என்றும், தெரிய வருகிறது. எனவே, றமலான் மாதத்தில் வித்றுத் தொழுகை உட்பட பதினொரு

ரக்கஅத்துகளை இமாம் ஜமாஅத்தாகத் தொழுவது நபி(ஸல்) அவர்களுடைய ஸுன்னத்து என்றும், வித்ருத் தொழுகையை அல்லாமல் தராவீஹை இருபது ரக்கஅத்துகளாகத் தொழுவது குலபாயே ருஷிதீன்களின் ஸுன்னத்து என்றும் இமாம் இப்னு ஹுமாம் (றஹ்) கூறியுள்ளார். தவிர இருபது ரக்கஅத்துகள் என்று பெரும்பான்மையான ஸஹாபிகள் ஏகமனதாக ஏற்படுத்தினார்கள். என்று இமாம் பைஹக்கி (றஹ்) கூறியுள்ளார் அதாவது ஹஜ்ரத் உமர் பாறுக் (றலி) அவர்கள் காலத்தில் யுத்தம், சன்மார்க்கப் பிரசாரம் போன்ற காரியங்களுக்காக திரு மதீனவை விட்டு வெளியிடங்களுக்குச் சென்றிருந்த ஸஹாபிகள் நீங்கலாக திரு மதீனவில் தங்கி இருந்த ஸஹாபிகள் யாவரும் ஏகமனதாக இருபது ரக்கஅத்துகள் என்று ஏற்படுத்தினர்கள் எனத் தெரிய வருகிறது.

தவிர தராவீஹ் தொழுகையை வித்று நீங்கலாக இருபது ரக்கஅத்துகள் தொழுவது நபி (ஸல்) அவர்கள் செய்கையையும், குலபாயே ருஷிதீன்களின் செய்கையையும், நபி (ஸல்) அவர்களின் கட்டளையையும் பின் பற்றுவதாக இருக்கிறது. வித்றுத் தொழுகையை அல்லாமல் எட்டு ரக்கஅத்துகள் மட்டும் தொழுவது நபி (ஸல்) அவர்களின் செய்கையைப் பின் பற்றுவதாக இருந்த போதிலும், நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் மீறுவதாக இருக்கிறது. எவ்வாறெனில், ''என்னுடைய ஸுன்னத்தையும், குலபாயே ருஷிதீன்களின் ஸுன்னத்தையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று நபி (ஸல்) அவர்கள் கட்டளை இட்டுள்ளார்கள். எட்டு ரக்க அத்து

மட்டும் தராவீஹ் தொழுதால் நபி (ஸல்) அவர்களின் இக்
கட்டளைக்கு நாம் கவுரவும் கொடுக்க வில்லை என்று ஏற்
படுவதோடல்லாமல், நபி (ஸல்) அவர்கள் காலத்தில் இரு
பது ரக்கஅத்துகள் தொழுததாக இப்னு அப்பாஸ் (றலி)
அவர்கள் கூறியுள்ள ஹதீதையும் மதிக்கவில்லை என்பதாக
ஏற்படுகிறது. மேலும் நபி (ஸல்) அவர்களுடைய செய்கை
அவர்களுடைய கட்டளை ஆகிய இரண்டில் எதனை முஸ்லிம்
கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று இமாம்கள் விவாதம்
செய்து நபி (ஸல்) அவர்களுடைய கட்டளைக்குத்தான்
முதன்மை ஸ்தானம் கொடுக்கவேண்டும் என்று அவர்கள்
சட்டம் இயற்றி யுள்ளார்கள். ஆதலின், வஹ்ஹாபிகள்
செய்வதை ஸுன்னத்து வல் ஜமா அத்தார் கவனிக்காமல்
தராவீஹ் தொழுகையில் இருபது ரக்கஅத்துகள் தொழுவது
தான் நல்லது.

113794

ஒவ்வொரு நான்கு ரக்க அத்துகளுக்கும் பின்னர் நான்கு
ரக்கஅத்துத் தொழும் நேரம் அளவுக்குத் தாமதித்து ஓய்வு
எடுத்துக் கொள்வது முஸ்தஹப்பு, இந்த ஓய்வு நேரத்தில்
தஸ்பீஹ் ஓதலாம் அல்லது திரு குர்ஆன் ஓதலாம், ஸலவாத்
தும் ஓதலாம். எதுவும் ஓதாமலும் இருக்கலாம். நபில்
தொழலாம். இவ்வாறாக வசதிப்படி செய்யலாம். இதனாற்றான்
ஒவ்வொரு நான்கு ரக்கஅத்துகளுக்கும் பின்னால் மஸ்ஜிது
களில் ஓதும் ஸலவாத்து தக்பீர்களில் எல்லா ஊர்களிலும்
ஒன்று போலில்லாமல் சொற்ப வித்தியாசமிருந்து வருகிறது.

றமலான் மாதத்தில் தராவீஹ் தொழுகையில் திருகுர்
ஆன் முழுவதையும் ஒருமுறை ஓதி கத்தம் செய்வது ஸுன்
னத்து. இரண்டு கத்தம் செய்வது பளீலத்து. (சிறப்பு)

மூன்று கத்தம் செய்வது அப்ளல் (மிகவும் சிறப்பு). ஜனங்கள் சோம்பேறிகளாக இருக்கிறார்கள் என்பதற்காக இதனை விட்டு விடக்கூடாது. ஆனால், தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு இது பளுவாக இருக்கும் பட்சத்தில் கத்தம் செய்வதை நிறுத்தி விட்டு சிறுஸூருக்களை ஓதி தராவிஹ் தொழுக வேண்டும். ஏனெனில், தொழுகை முதலியவைகள் தெய்வ வணக்கத்தைச் சேர்ந்தவைகளாதலால், பொதுமக்களுக்கு கஷ்டம் ஏற்படக் கூடிய அளவுக்கு அவர்களை சிரமப் படுத்தலாகாது.

# வித்றுத் தொழுகை

ரமலான் மாதத்தில் தராவீஹ் தொழுகைக்குப் பின்னர் வித்றுத் தொழுகையை இமாம் ஜமாஅத்தாக நிறை வேற்றுகின்றனர். இவ்வித்றுத் தொழுகையில், ரமலான் மாதத்தின் பிற்பகுதியில், மட்டும் ஷாபிஈ மதுஹபினர் குனூத்து ஓதுவர். மாலிக் மதுஹபினர் அதேபோன்றுதான் ஓதுவர். ஹனபி, ஹன்பலி மதுஹபினர் வருட முழுதும் வித்றுத் தொழுகையில் கடைசி ரக்கஅத்தில் ருக்கூவுக்கு முன்னதாக கையை விட்டுக்கட்டி குனூத் ஓதுவர். அத்துடன் வித்றுத் தொழுகையின் கடைசி ரக்கஅத்தில் குல்ஹுவல்லாஹு, குல் அஊது பிரப்பில் பலக்கு, குல்அஊது பிரப்பின்னாஸ், ஆகிய மூன்று ஸூரத்துகளையும் ஷாபிஈ மாலிக்கி மதுஹபினர் ஓதுவர். ஹனபி மதுஹபினர் வித்றுத் தொழுகையில் மூன்று ரக்க அத்துகளையும் ஒரே ஸலாமில் தொழுவர். ஷாபிஈ மதுஹபினர் இரண்டு ரக்கஅத்தில் ஸலாம் கொடுத்து விட்டு, உடனே தக்பீர் கட்டி ஒரு ரக்கஅத்துத் தொழுவர். ஹனபீ ஷாபி, மதுஹபுகளுக்கிடையில் குனூத்ஓதுவதில் வித்தியாச

மிருக்கிறது. ஹனபி மதுஹபினர் குனூத் ஓதுவதை சப்த மில்லாமல் இமாமும், அவரைப் பின்தொடந்து தொழுவரும் ஓதுவர். ஷாபிஈ மதுஹபினர் மூன்ருவது ரக்கஅத்தில் ருக்கூஉக்குப்பின் சிறு நிலையில் இருந்து கொண்டு, பாத்திஹா ஓதுவது போல கையை உயர்த்திக் கொண்டு குனூத் ஓதுவர், இமாம் குனூத்தை இரைந்து ஓதுவர். முக்ததீகள் ஆமீன் கூறுவர். ஸுப்ஹு தொழுகையில் அவர்கள் ஓதுகிற குனூத்தையே ஓதுவர்.

## இஃதிகாப்

ரமலான் மாதம் கடைசி பத்து நாட்களில் இஃதிகாப் இருப்பது ஸுன்னத்து கிபாயாவாகும். ஆடவர்கள் மஸ்ஜிதிலும், ஸ்திரீகள் வீட்டில் தொழுகைக்காக ஒதுக்கி வைத்திருக்கும் இடங்களிலும் இஃதிகாப் இருக்க வேண்டும். மலஜல உபாதைகளைக் கழித்தல், ஸ்நானஞ் செய்தல். ஒலுச் செய்தல் போன்ற முக்கியமான காரியங்களுக்காக மஜ்ஜிதை விட்டு வெளியில் வரலாம். ஆனல், அனவசியமாக காலதாமதஞ் செய்து கொண்டு வெளியிற்றங்கலாகாது. தனக்குச் சாப்பாடு கொண்டு வந்து கொடுக்க ஆள் இல்லாவிடில் சாப்பிடுவதற்காக வீட்டுக்கு வரலாம். ஆனல், சாப்பிட்டவுடன் தாமதமின்றி மஜ்ஜிதுக்கு வந்துவிட வேண்டும். இஃதிகாப்பிருப்பவர் மஜ்ஜிதில் சாப்பிடலாம், நித்திரையும் செய்யலாம்.

ரமலான் மாதத்தில் கடைசிப் பத்துத் தினங்களில் இஃதிகாப் இருப்பது ஸுன்னத்து முஅக்கதா கிபாயா அதாவது 'ஒரு ஊரில் ஒருத்தரோ, பலரோ இஃதிகாப் இருந்து

விட்டால் போதுமானது. அந்த ஊரிலுள்ளயாவரும் இஃதி காப்இருக்க வேண்டுமென்ற பொறுப்பிலிருந்து விலகி விடு வார்கள். யாருமே இஃதிகாப் இருக்காவிடில், அந்த ஊரி லுள்ள யாவரும்ஸுன்னத்து முஅக்கதாவைநிறைவேற்றுமல் விட்ட குற்றத்திற்கு ஆளாவார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவ ர்களும், அவர்களுடைய காலத்திற்குப் பின்னர் நம் பிராட்டிமார்களும் இஃதிகாப் இருந்து கொண்டிருந்தார்கள்.

ஐந்து நேரமும் இமாம் ஜமாஅந்தாக தொழுகை நிறை வேற்றப் படுகின்ற மஜ்ஜிதில் ஆடவர்கள் 'இஃதிகாப்' இருக்க வேண்டும். பெருநாள் தொழுகை ஜும்ஆ தொழுகை போன்ற மத சம்பந்தமான அவசியமான காரியங் களுக் கல்லாமல் மஜ்ஜிதை விட்டு வெளியில் செல்லக் கூடாது. மலஜல உபாதை கழித்தல், கடமையான ஸ்நானங் களைச் செய்தல், ஒலுச் செய்தல் போன்ற காரியங்களுக்காக மஜ்ஜிதை விட்டு வெளியில் வரலாம். ஆனுல், அனுவசிய மாக தாமதம்செய்யாமல் மேற்கொண்ட காரியங்களை முடித் துக் கொண்டு மறுபடியும் மஜ்ஜிதுக்குச் சென்று விடவேண் டும். இஃதிகாப் இருப்பதாக நிய்யத்துச் செய்து (உறுதி பூண்டு) ஒருமஜ்ஜிதில் இருப்பவர் வேறு மஜ்ஜிதுக்குப் பெரு நாள் தொழுகை ஜும்ஆத் தொழுகை போன்ற காரணத்திற்கல் லாமல் அனுவசியமாகச் செல்லக் கூடாது. இஃதிகாப் இருக் கக் கூடிய மஜ்ஜித் தற்செயலாக இடிந்து விட்டால் அப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில்வேறு மஜ்ஜிதுதுக்குச் சென்று இஃதிகாப் இருக்கலாம். ''இஃதிகாப் இருப்பவர் மௌனமாக இருக்க வேண்டும், எவரிடத்திலும் பேசக்கூடாது'' என்று எண்ணிக் கொண்டு மௌன விரதம் சாதிப்பது கூடாது. உபதேசங்கள்

செய்யலாம். மஸ்அலாக்கள் சொல்லலாம், திரு குர்ஆன் திக்று ஸலவாத்து முதலியவைகளை ஓதலாம். மத சம்பந்தமான புஸ்தகங்களையும் மஸ்அலாக்களையும் எழுதலாம் அனுவசியமான பேச்சுக்களை கூடியவரை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அல்லாஹுத ஆலாவை வணங்க வேண்டும் என்ற நிய்யத்துடன் தன்னுடைய ஜீவியத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மஜ்ஜிதில் தங்கி இருப்பதற்கு இஃதிகாப் என்று பெயர்.

தன்னுடைய கோரிக்கைகள் நிறைவேற வேண்டுமென்பதற்காக இஃதிகாப் இருக்கலாம் இதற்கு நதர் (நேர்த்திக் கடன்) என்று பெயர். இந்த விதமாக இஃதிகாப் இருப்பவர் பகல் காலங்களில் நோன்பு நோற்க வேண்டும். எத்தனை நாட்கள் இஃதிகாப் இருப்பதாக பிரதிக்ஞை செய்து காண்டாரோ அத்தனை நாட்களும் நோன்பு நோற்று மேற் கண்டவாறு இஃதிகாப் இருப்பது வாஜிபு (கடமை). இதனை அல்லாமல் மஜ்ஜிதுக்குச் செல்லும் போதெல்லாம் இஃதிகாப் இருப்பதாக நிய்யத்துச் செய்து. மஜ்ஜிதில் தங்கி இருக்கலாம். இதற்கு முஸ்தஹப்பான (விரும்பத்தக்க) இஃதிகாப் என்று பெயர். இதற்கு நாட்கணக்கில்லை, நிமிடக் கணக்கிலும் கூட இருக்கலாம். நாட்கணக்கில் இஃதிகாப் இருப்பவர் சூரியாஸ்தமனத்துக்கு முன்னதாக இஃதிகாப் ஆரம்பித்து, மறுநாள் மஹ்ரிபுக்குப் பின்னர் இஃதிகாபைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

## லைலத்துல் கத்ர்.

ரமலான் மாதத்தில் லைலத்துல் கத்ரில் லௌஹுல் மஹ்பூளிலிருந்து முதலாவது வானுக்கு திருகுர்ஆன் அரு

ளப்பட்டது. அப்புறம் ரபீஉல் அவ்வல் மீ 12–வ ஹிரா மலைப் பொதும்பில் நபி (ஸல்) அவர்கள் தங்கி இருக்கையில் ஸூறத்துல் இக்ரஉவிலுள்ள முதல் ஐந்து ஆயத்துக்கள் ஹஜ்றத் ஜிப்றயீல் (அலை) அவர்களால் வஹீ மூலம் முதன் முதலாக அறிவிக்கப் பட்டது. அதற்குப் பிறகு சமய சந்தர்ப் பத்துக்குத் தேவையான ஆயத்துகளும் ஸூறத்துகளும் கொஞ்சங் கொஞ்சமாக வஹீ மூலம் அறிவிக்கப் பட்டிருக் கின்றன. ஆகவே, லௌஹுல் மஹ்பூளிலிருந்து முதலா வது வானுக்கு அருளப்பட்ட முழு குர்ஆன் எந்த இரவில் அருளப்பட்டதோ அந்த இரவுக்கு லைலத்துல் கத்ர் (மகத்து வமுள்ள இரவு) என்பதாக இறைவன் தன்னுடைய திரு மறையிலேயே குறிப்பிட்டு அந்த இரவில் செய்யப்படும் வணக்கங்களுக்குஎவ்வளவு அதிகமான நன்மைகள் விசேஷ மாகக் கொடுக்கப் பட்டுகின்றன என்பதையும் விவரித் துள்ளான்.

அந்த மகத்தான இரவு ரமலான் மாதத்திலேயே இருக் கிறது என்பது திருகுர்ஆன் மூலமாகவே அறிவிக்கப் பட்டி ருப்பதால்தான், தராவீஹ் தொழுகையும் இஃதிகாபும் விசேஷ மாக ரமலான் மாதத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்று யூகிக்க வேண்டியதிருக்கிறது. தவிர, லைலத்துல் கத்ரை ரமலான் மாதத்தின் கடைசிப் பத்தில்ஒற்றைப்படவுள்ள இரவுகளில் எதிர்பாருங்கள் என்று ஹதீது ஷரீபிலும் வந்திருக் கிறது. ஆதலால், ரமலான் கடைசிப் பத்தில் இஃதிகாப் இருந்து அந்த இரவு தவறிப்போகாதிருக்க சன்மார்க்கத்தில் திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. ரமலான் மாதத்தின் கடை சிப் பத்தில் ஒற்றைப்படவுள்ள இரவு என்று பொதுப்படக்

கூறப்பட்டிருக்கிறதே யன்றி குறிப்பாக இந்தத் தேதியின் இரவு என்று நிச்சயமாகக் கூறவில்லை. இதுபோலவே, ரமலான் மாதத்தின் கடைசிப் பத்தில் எதிர்பார்க்குமாறுதான் கூறப்பட்டிருக்கிறதே யன்றி கடைசிப் பத்துத் தேதியில்தான் அந்த இரவு இருக்கிறது. அதற்கு முந்திய இருபது நாட்களில் அது இல்லை என்று நிச்சயமாகக் கூறப்படவுமில்லை. ஆதலால், ஆரிபுகள் என்னும் ஞானவான்களும், ஆபிதுகள் என்னும் தபோதனர்களும் ரமலான் மாதம் முழுவதிலுமே விசேஷமாக ஜபதபங்களில் ஈடுபட்டு அந்த இரவின் விசேஷ பலனை அடைந்து விடுகின்றனர். இது ஸ்திரீ. புருஷர், இளையோர் முதியோர், ஏழை, பணக்காரர் ஆகிய யாவருக்கும் சாத்தியமானதாக இல்லாததால் ரமலான் மாதத்தின் சில குறிப்பிட்ட இரவுகளில் மட்டும் விசேஷமாக நபில்களைத் தொழுது வணங்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அந்த இரவுகளைப் பற்றிய விபரம் வருமாறு:—

1. ரமலான் மாதத்தின் முதல் இரவில் ஸூறத்துல்பத்தஹ் அதாவது இன்னுபத்தஹ்னு ஸூறத்தை ஓதினல் அவ் வருஷம் முழுவதிலும் அல்லாஹுதஆலாவின் பாதுகாவலும் அவனுடைய உதவியுமிருக்கும் என்று இப்னுமஸ்ஊத் (றலி) அவர்கள் கூறியுள்ளார்கள். அன்று பகலில் நான்கு ரக்கஅத்துகள் நபில் தொழவேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் அல்ஹம்து ஸூறத்துக்குப் பிறகு ஆயத்துல் குர்ஸீ ஐந்துமுறை ஓதிதொழுகையைப் பூர்த்தி செய்யவேண்டும். தொழுது முடித்த பிறகு ஆயத்துல் குர்ஸீயை ஒரு முறை ஓத வேண்டும்.

ரமலான் மாதத்தின் முதல் இரவில் இரண்டு ரக்கஅத் நபில் தொழவேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் அல் ஹம்து ஸூறத்துக்குப் பிறகு ஸூறத்துல் பத்தஹ் அதாவது இன்னு பத்தஹ்னு ஸூறத்தை ஒரு முறை ஓதித் தொழுது ஸலாம் கொடுத்த பின்னர் ஸூறத்துல் கத்ர் அதாவது இன்னு அன்ஸல்னு ஸூறத்தை பத்து முறையும், ஸலவாத்து பத்து முறையும் ஓத வேண்டும் என்று ஹஜ்றத் அபூஹுறைறு (றலி), அபூஸயீதினில் குத்ரீ (றலி) ஆகியவர்கள் கூறி இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

2. ரமலான் பத்தாவது இரவில் இரண்டு ரக்கஅத்துகள் நபில் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் ஸூறத்துல் பாத்திஹாவுக்குப் பின்னர் ஆயத்துல் குர்ஸீ ஏழு முறையும், ஸூறத்துல் இக்லாஸ் அதாவது குல்ஹுவல் லாஹு குல்அஊது பிறப்பில் பலக் குல் அஊது பிறப்பின் னுஸ் ஆகிய ஸூறத்துகள் ஒவ்வொன்றையும் ஐந்து முறை ஓதித் தொழுகையைப் பூர்த்தி செய்ய வேண்டும். அப்புறம், ஆயத்துல் குர்ஸீ ஏழுமுறையும், ஸலவாத்து மும் முறையும் ஓத வேண்டும்.

ரமலான் பத்தாவது தேதி பகலில் நான்கு ரக்க அத்துகள் நபில் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்கா அத்திலும் ஸூறத்துல் பாத்திஹாவுக்குப் பின்னர் குல்யா அய்யூஹல் காபிறூன், குல்ஹுவல்லஹு ஆகிய ஸூறத்துகள் ஒவ்வொன்றையும் பத்து முறை ஓத வேண்டும.

3. ரமலான்பதினைந்தாவது இரவில்நான்கு ரக்கஅத்துகள் நபில் தொழவேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும்

ஸூறத்துல் பாத்திஹாவுக்குப் பின்னர் குல்ஹுவல் லாஹு ஸூறத்தை பத்துமுறை ஓதித் தொழுகையைப் பூர்த்தி செய்யவேண்டும்.

பதினைந்தாவது தேதி பகலில் பன்னிரண்டு ரக்கஅத்துகள் நபில் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் ஸூறத்துல் பாத்திஹாவுக்குப் பின்னர் ஆயத்துல் குர்ஸி ஒரு முறையும் இன்னஅன் ஸல்னா ஸூறத்து மூன்று முறையும் ஓதித்தொழுது முடிந்த பிறகு ஆயத்துல் குர்ஸீ பத்து முறை ஓத வேண்டும்.

4. றமலான் இருபதாவது இரவில் இரண்டு ரக்கஅத்து நபில் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் ஸூறத்துல் பாத்திஹாவுக்குப் பின்னர் யாஸீன் ஸூறத்தை ஒருமுறை ஓதித் தொழுகையைப் பூர்த்தி செய்து விட்டு ஆயத்துல் குர்ஸீ மூன்று முறையும், ஸலவாத்து மூன்று முறையும் ஓத வேண்டும்.

றமலான் இருபதாவது தேதி பகலில் இரண்டு ரக்கஅத்துகள் நபில் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் ஸூறத்துல் பாத்திஹாவுக்குப் பின்னர் ஆயத்துல் குர்ஸீ, குல்யாஅய்யுஹல் காபிறூன், குல்ஹுவல்லாஹு ஆகிய ஸூறத்துகள் ஒவ்வொன்றையும் ஒரு முறை ஓதித் தொழுகையைப் பூர்த்தி செய்ய வேண்டும். பின்னர் குல்ஹுவல் லாஹு ஸூறத்தை பத்து முறையும், ஸலவாத்து பத்து முறையும் ஓத வேண்டும்.

5. லைலத்துல் கத்ர் ரமலான் இருபத்து ஏழாவது இரவு இந்த இரவில் ஒருவர் இரண்டு ரக்கஅத்துகள் நபில் தொழுது, ஒவ்வொரு ரக்கஅத்திலும் ஸூறத்துல் பாத்திஹாவுக்குப் பின்னர் குல்ஹுவல்லாஹு ஸூறத்தை ஏழுமுறை ஓதி தொழுது ஸலாம் கொடுத்த பின்னர் ''அஸ் தஃபிறுல்லாஹ வஅத்தூபு இலைஹி'' என்று எழுபது முறை இஸ்திஃபாக் ஓத வேண்டும். இவ்வாறு செய்பவருடைய மாதா பிதாக்களுக்கும் இறைவன் பாபமன்னிப்புச் செய்வான். அல்லாஹுதஆலா சுவர்க்கத்துக்கு மலக்குகளை அனுப்பி அவருக்காக விருட்சங்களை நாடச்செய்வதுடன் மாளிகைகளையும் கட்டச்செய்கிறான். அவர்களுக்காக ஆறுகளையும் ஓடச் செய்கிறான். இவை யாவையும் அவர் சொற்பனத்தில் பார்த்துக்கொள்ளாமல், இவ்வுலகை விட்டு அவர் அகலமாட்டார் என்று ''இஹ்யாஉல் உலூம்'' என்ற கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

லைலத்துல்கத்ரின் இரவில் குறைந்தபட்சம் இரண்டுரக்கஅத்துகள், அதிகபட்சம் ஆயிரம் ரக்கஅத்துகள். நடுத்தரம் நூறு ரக்கஅத்துகள் நபில் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் நடுத்தரமான கிராஅத்து ஸூறத்துல் பாத்திஹாவுக்குப் பின்னர் இன்னாஅன்ஸல்னா ஸூறத்தை ஒரு முறை குல்ஹு வல்லஹு ஸூறத்தை மூன்று முறையும் ஓதி ஒவ்வொருஇரண்டுரக்கஅத்துகளிலும் ஸலாம் கொடுத்து தொழுகையைப் பூர்த்தி செய்ய வேண்டும். தொழுகைக்குப் பின்னர் ஸலவாத்து ஓதவேண்டும் என்று அல் இமாம் அபுல்லைத் (றஹ்) கூறி இருக்கிறார்.

ரமலான் மாதத்தின் முப்பதாவது இரவு. இதில் பன்னிரண்டு ரக்கஅத் துகள் நபில் தொழவேண்டும். ஒவ்வொரு

ரக்கஅத்திலும் ஸூறத்துல் பாத்திஹாவுக்குப் பின்னர் ஆயத்துல் குர்ஸீ பத்து முறையும், இன்னாஅன்ஸல்னா ஸூறத்துல் குல்ஹுவல்லாஹு ஸூறத்து ஆகிய ஒவ்வொன்றும் இருபத்தைந்து முறையும் ஓதித் தொழுகையை முடித்த பின்னர் இருபத்தைந்து முறை ஸலவாத்து ஓதவேண்டும்.

இரவிலுள்ள நபிலான தொழுகைகளை இரண்டிரண்டு ரக்க அத்துகளாகத் தொழுவது தான் ஏற்றம். ஆதலால், மேலேகண்ட தொழுகைகளை இரண்டிரண்டு ரக்க அத்துகளாகத் தொழுகவேண்டும் என்பதை ஞாபகத்தில வைத்துக் கொள்ளவேண்டும். அல்லாமலும், பர்ளுத் தொழுகைகள் களாவுள்ளவர்கள் இந்த நபில் தொழுகைகளுக்குப் பதிலாக தங்கள் மீது கடமையாக இருக்கிற பர்லான களாத் தொழுகைகளை நிறைவேற்றுவார்களாயின் இந்த புண்ணிய இரவில் இபாதத் என்னும் வணக்கம்புரிந்த கண்ணியத்துக்கு உரியவர்களாவதுடன், தங்கள் மீது கடமையாக இருந்தவைகளை நிறைவேற்றியவர்களாகவும் ஆவார்கள். ஆதலால், களாத்தொழுகையுள்ளவர்கள் களாவை நிறைவேற்றுவது மிக விஷேசமாகும். களாத் தொழுகையையும் நிறைவேற்றிக் கொண்டு மேலே கண்ட நபில் தொழுகைகளையும் நிறைவேற்றுவது இன்னும் அதிக விஷேசமாகும், தவிர முற்கூறப்பட்ட நபில் தொழுகைகளை நிறைவேற்ற சக்தியுள்ளவர்கள் நிறை வேற்றலாம். இயலாதவர்கள் தங்களாலியன்ற இதர வணக்கங்களையும் புரியலாம்.

## பித்ரு ஸதக்கா

றமலான் மாதம் முடிந்து பெருநாளன்று பித்ரு ஸதக்கா கொடுப்பது ஹனபி மதுஹபில் வாஜிபு. ஷாபிசு மதுஹபில்

இதற்கு பித்ரு ஜக்காத் என்றும், இது பர்லு என்றும் கூறுவர். இந்த இடத்தில் பர்லு என்பது ஹனபி மதுஹபில் கூறப்படுகிற வாஜிபையே குறிப்பிடுவதால் எல்லா மதுஹபுகளும் பித்ரு ஸதக்காவை வாஜிப் என்றே கூறுகின்றன என்று கொள்ள வேண்டும். இளையோர், முதியோர் யாவர் மீதும் இது வாஜிபு என்பதை நான்கு மதுஹபுகளும் ஏகமனதாக அங்கீகரித்திருக்கின்றன.

பித்ரு ஸதக்காக் கொடுப்பவர் ஜக்காத்துக் கொடுக்க அருக்கதையுள்ளவராக இருக்க வேண்டும் என்று இமாம் அபூஹனீபா (றஹ்) கூறியுள்ளார்கள். ஜக்காத்துக் கொடுக்க அருக்கதையுள்ளவர்தான் பித்ரு ஜக்காத்து கொடுக்க வேண்டும் என்ற நியதி இல்லை. பெருநாளன்று இரவும் பகலும் தனக்கும், தன் குடும்பத்தாரில் தன்னால் சம்ரட்சணை செய்யப் பட வேண்டியவர்களுக்கும் தேவையான உணவுக்கு மேல் அதிகமாக பித்ரு ஜக்காத் அளவுக்கு இருக்கிற யாவர் மீதும் இது கடமை என்பதாக இமாம் மாலிக் (றஹ்), இமாம் ஷாபிஈ (றஹ்), இமாம் அஹ்மதுப்னு ஹன்பல் (றஹ்) ஆகிய மூவரும் கூறியுள்ளார்கள்.

பித்ரு ஸதக்காக் கொடுக்கக் கடமைப் பட்டவர் தனக்காகவும், தன்னுடைய சிறு குழந்தைகளுக்காகவும், தனக்குச் சொந்தமான முஸ்லிம் அடிமைகளுக்காகவும் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார் என்பதாக நான்கு மதுஹபுகளும் கூறுகின்றன.

தன் மனைவிக்காகவும், தன்னுடைய வயது வந்த மக்களுக்காகவும், வியாபாரத்திற்காகவைத்திருக்கும்அடிமைக்

காகவும் பித்று ஸதக்காக் கொடுக்க வேண்டியதில்லை. தன்னுடைய மக்களில் சிறுவர்களா யிருப்பவர்களுக்கு பிரத்யேகச் சொத்திருந்தால் அச்சொத்திலிருந்து பித்று ஸதக்காக்கொடுக்க வேண்டும்.

மணிக் கோதுமை அரை மரக்கால் அல்லது பேரீத்தம் பழம், கொடிமுந்திரிப் பழம், தொலிக் கோதுமை ஆகியவைகள் ஒரு மரக்கால் பித்று ஸதக்காக் கொடுக்க வேண்டும். இவைகளின் கிரயத் தொகையையும் கொடுக்கலாம். ஒரு மரக்கால் என்பது தற்போது அரசாங்கத்தார் நிர்ணயித்துள்ள பட்டணம்படியில் இரண்டே கால்படிகள் உள்ளது.

பெருநாளன்று கிழக்கு வெளுத்தவுடன் பித்று ஸதக்கா வாஜிபாகும் என்று இமாம் அபூஹனீபா (றஹ்), கூறி இருக்கிறார்கள். றமலான் மாதம் முடிவடைந்து ஷவ்வால் மாதம் பிறை பார்த்தவுடன் மகுரிபு வேளையிலிருந்து பித்று ஜக்காத் வாஜிபாகிறது என்று ஷாபிஈ மதுஹபில் ஊர்ஜிதமான சொல்லில் கூறப்பட்டிருக்கிறது.

பித்று ஸதக்கா வாஜிபான பிறகு அதனை நிறைவேற்றுவதில் தாமதமேற்பட்டாலும் அதனை நிறைவேற்ற வேண்டும். ஆனால், பெருநாள் முடிவதற்கு முன்னதாகக் கொடுக்க வேண்டும். அதற்கும் அதிகமாகத் தாமதம் செய்யக் கூடாது. தொலிக் கோதுமை, மணிக் கோதுமை, பேரீத்தம் பழம், திராக்ஷைப்பழம் ஆகியவைகளை பித்று ஸதக்காவாகக் கொடுக்கலாம். உஷ்று என்ற வரியில் வசூல் செய்வதற்கு தகுதியான தானிய வகைகளையும் பித்று ஜக்காத்தாகக் கொடுக்கலாம் என்று இமாம் ஷாபிஈ (றஹ்), கூறியுள்ளார்கள்.

மேற்கண்ட தானிய வகைகளையோ, இவைகளின் கிரயத் தொகையையோ பித்று ஸதக்காவாகக் கொடுக்க லாம் என்று இமாம் அபூஹனீபா (றஹ்), கூறியுள்ளார்கள். பித்று ஸதக்காவை ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னதாகவும் கொடுக்கலாம். ரமலான் மாதம் பிறப்பதற்கு முன்னதாகவும் அதனைக் கொடுக்கலாம் என்று இமாம் அபூ ஹனீபா (றஹ்), கூறியுள்ளார்கள். ஒரு மாதம் வரையிலும் முன்னதாகவே கொடுக்கலாம் என்று இமாம் ஷாபிஈ (றஹ்) கூறியுள்ளார்கள்.

## பெருநாள் தொழுகை

சூரியன் உதயமாகி கொஞ்ச நேரம் கழித்து நடுப்பகல் வரை பெருநாள் தொழுகையை நிறைவேற்றலாம். தொழுது கொண்டிருக்கும் போதே நடுப்பகல் வந்து விட்டால் தொழுகை கூடாது. இமாம் ஜமா அத்தாகவே தொழுக வேண்டும். தக்பீர் தஹ்ரீமா கட்டித்தனு ஓதிய பின் தக்பீர் சொல்லி கையை உயர்த்தி, தக்பீர் கட்டாமல் கையை சோர விட வேண்டும். இவ்வாறு இரண்டு முறை செய்து மூன்றும் முறையில் தக்பீர் கட்டிக்கொள்ள வேண்டும். அப்புறம் வழக்கம்போல் கிராஅத் ஓதி ருக்கூஉ சுஜூது செய்ய வேண்டும். இரண்டாவது ரக்கஅத்தில் கிராஅத்திற்குப் பிறகு முற்கூறியதுபோல் மூன்று முறை தக்பீர் சொல்லி நான்காவது முறையில் தக்பீர் சொல்லி ருக்கூஉ முதலியவை செய்து இரண்டாவது ரக்கஅத்தை முடிக்க வேண்டும். பெருநாள் தொழுகைக்கு இரண்டு ரக்கஅத்துகள்தான் ஏற் பட்டது. இந்தப் பெருநாளின் தொழுகையை இந்த இமா முடன் சேர்ந்து அல்லாஹுதஆலாவுக்காகத் தொழுகிறேன்.

என்று நிய்யத்துச் செய்து தக்பீர் கட்டித் தொழுக வேண்டும்.

ஜும்ஆ கடமையானவர்கள் மீதெல்லாம் பெருநாள் தொழுகையும் கட்மை (வாஜிபு). ஸுன்னத்து முஅக்கதா என்றும் சிலர் கூறியிருக்கிறார்கள். பெருநாள் தொழுகைக்குப் பிறகு குத்பா ஓதுவது சுன்னத்து. பெருநாள் தொழுகைமட்டும் ஒருவர், தொழுது விட்டுப் பெருநாள் குத்பாவைக் கேட்காது இருந்து விட்டால், அவருடைய தொழுகை நிறைவேறி விடும். ஆனால், குத்பாவை விட்ட குற்றத்திற்கு ஆளாவார்.

ஷாபிஈ, மாலிக்கி மதுஹபுகளில் பெருநாள் தொழுகை சுன்னத்துதான். ஜும்ஆ தொழுகைக்குத் தேவையான ஷர்த்துகள் பெருநாள் தொழுகைக்குத் தேவையில்லை. தனித்தனியாகவும் கூடத் தொழுகலாம். என்று கூறப்பட்டிருக்கிறது. பெருநாள் தொழுகையில் ஹனபி மதுஹபில் முதல் ரக்கஅத்தில் மூன்றும், இரண்டாவது ரக்கஅத்தில் மூன்றும் ஆக ஆறு தக்பீர்கள் அதிகமாகச் சொல்ல வேண்டும். முதல் ரக்கஅத்தில் தக்பீர் கட்டித் தனா ஓதிய பிறகு மூன்று தக்பீர்கள் சொல்லி விட்டுக் கிராஅத்து ஓதவேண்டும். இரண்டாவது ரக்கஅத்தில் கிராஅத்து ஓதிய பின்னர் ருக்கூஉக்குப் போவதற்கு முன்னர் மூன்று தக்பீர் சொல்ல வேண்டும். இந்தத் தக்பீர்களுக்கு இடையில் எதுவும் ஓதக் கூடாது. ஷாபிஈ மதுஹபில் தக்பீர்களுக்கிடையில் துஆ செய்வது முஸ்தஹப்பு. முந்தினரக்க அத்தில் தனாவுக்குப் பிறகு கிராஅத்துக்கு முன்னர் ஏழு முறை தக்பீர் சொல்ல வேண்டும், இரண்டாவது ரக்க அத்தில் கிராஅத்து ஓதுவதற்கு முன்னதாகவே ஐந்து முறை தக்பீர் சொல்ல வேண்டும். இந்தத் தக்பீர் சொல்லும் பொழுது, தொழுகைக்குத் தக்பீர் கட்ட கையை உயர்த்துவது போல் கையை உயர்த்த வேண்டும்.

# நிய்யத்துகள்

நியயத்து என்பதற்கு நிர்ணயஞ் செய்தல், உறுதி கொள்ளல் என்பது கருத்து. ஒரு காரியத்தைச் செய்வதாக மனதில் நிர்ணயஞ் செய்வதே நிய்யத்தாகிவிடும். அந்த நிய்யத்தை நாவால் மொழிய வேண்டும் என்ற அவசிய மில்லை. என்றாலும், நாவால் மொழிவது ஸுன்னத்தாக இருப்பதால் இங்கு ரமலான் நோன்பு நோற்றல், நோன்பு திறத்தல், தராவீஹ் தொழுகை, வித்ருத் தொழுகை, இஃதிகாப், லைலத்துல்கத்ர் தொழுகை, பெருநாள் தொழுகை ஆகியவைகளின் நிய்யத்தைத் தமிழில் எழுதுகிறோம். அறபியில்தான் நிய்யத்துச் செய்யவேண்டும். என்ற கட்டாயமில்லை அறபி தெரிந்தவர்கள் அறபியில் சொல்லிக் கொள்ளலாம். அவைகளின் விபரம் வருமாறு:-

1. ரமலான் நோன்பு நோற்றல்;- நாயனே உனக்காக நாளைய தினம் இந்த வருஷத்து ரமலான் மாதத்தின் பர்லான நோன்பை நோற்கிறேன். நான் முந்திச் செய்த பாபத்தையும் நான் பிந்திச் செய்த பாபத்தையும் மன்னிப்பாயாக.

2. நோன்பு திறத்தல்:- நாயனே, உனக்காக நோன்பு நோற்றேன். உன்னை விசுவாசித்தேன். உன்பால் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன், உன்னுடைய உணவைக் கொண்டு நோன்பு திறக்கிறேன்.

3. தராவீஹ் தொழுகை:- அல்லாஹு தஆலாவுக்காக தராவீஹ் தொழுகையின். இரண்டு ரக்காஅத்துக்களை

இந்த இமாமைப் பின் தொடர்ந்து தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.

4. ஸலத்துல்கத்ர் தொழுகை:- அல்லாஹுத ஆலாவுக்காக நபிலான இந்தத் தொழுகையை நிறை வேற்றுகிறேன். அல்லாஹு அக்பர்.

5. இஃதிகாப் நிய்யத்து;- ஸுன்னத்தான இஃதிகாப்பை அல்லாஹு தஆலாவுக்காக நிறைவேற்றுகிறேன்.

6. பெருநாள் தொழுகை:- இந்த நோன்புப் பெருநாளின் தொழுகை இரண்டு ரக்கஅத்துகளையும் அதிகப்படியான தக்பீர்களுடன் இந்த இமாமைப் பின் தொடர்ந்து தொழுகிறேன் அல்லாஹு அக்பர்.

★

முபாரக் அச்சகம், உத்தமபாளையம்:-57